செய்தால்தான் சலுகைகளை கொடுக்க முடியும். மின்சார வாரியமே உற்பத்திச் செலவை அதிகரித்து குறைந்த விலையிலே மின்சாரம் கொடுக்கின்ற போது நான் ஏற்கெனவே சொன்னதைப்போல அதிகமான நஷ்டத்தை ஏற்க இயலாது. ஆகவே அதற்காகத்தான் தன்னிறைவுத் திட்டங்கள் என்று கொண்டுவந்து ஊராட்சியிலே நிதி இல்லாத காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சிறந்த திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட விளக்குகளைப் போடவேண்டுமென்று அரசிடமிருந்து நிதி கொடுத்திருக்கிறார்கள் எங்களுக்கு ஆக அப்படி அரசிடமிருந்து நிதிகள் வருகின்ற நேரத்திலே நாங்கள் அந்தப் பணிகளை மின்சார வாரியத்தின் மூலம் மேற்கொள்ள முடியும் இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்திற்குப் பேரூராட்சியிலே கூட 150 கோடி ரூபாய் திட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு அரசு அது பற்றிப் பரிசீலிக்குமானால் மின்சார வாரியம் அந்தக் கருத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 671, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்.

671—

வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்வதை தடை செய்தல்.

*2905—திரு. கு. லாரன்ஸ்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்வதை தடை செய்யவும், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்துக் கொண்டு போவதைத் தடை செய்யவும், கடுமையான நட—வடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசிடம் கருத்துரு உள்ளது நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக். கொள்கிறேன்.

திரு. கு. லாரன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் சாதாரணமாக உணவுத் தட்டுப்பாடு, அரிசி உற்பத்தி குறைவான ஒரு மாநிலம். அண்மைக்காலங்களில் மத்திய அரசும் தன்னுடைய மத்தியத் தொகுப்பிலிருந்து.............ஊ

1992 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லாரன்ஸ் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கு. லாரன்ஸ்: அரிசியைக் குறைவாகக் கொடுக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரிசியைத் தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கின்றவர்கள் சமூக விரோதச் சக்திகளாகக் கருதப்பட வேண்டும். அவர்கள் மாறாக சமுதாயத்தினுடைய மிக முக்கியமான மனிதர்களாக இன்றைக்கு நடமாடுகிறார்கள். எனவே சமூக விரோத சக்திகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலேயிருந்து வெளி மாநிலங்களுக்கு 4 அல்லது 5 மாவட்டங்களின் வழியாக அரிசி எடுத்துச் செல்லப்பட்டதை அரசு அறிந்து அதை முழுமையாகத் தடுப்பதற்கு இன்றைக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. மாநில எல்லைகளில் செக்போஸ்டுகளைப் போட்டு அங்கே ஆயுதம் தாங்கிய போலீசாரை நிறுத்தி வைத்திருக்கிறோம். அது போக யார் யார் நெல் அரிசியைக் கடத்துகிறார்கள் என்று பார்த்து 10 பேர்களுக்கு மேலே அவர்களைக் கைது செய்து இன்றைக்கு பிளாக் மார்க்கெட்டியர்ஸ் பிரிவென்ஷன் ஆக்ட்டிலே உள்ளே வைத்திருக்கிறோம். சில பேர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுதலையாகி வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்த மாவட்டத்திலேயே ஒரு மிகப் பெரிய கடத்தல்காரரை கைது செய்து 2,3 மாதங்கள் உள்ளே இருந்து இப்போது வெளியேவந்து விட்டார். ஆனாலும் அடுத்தவர்கள் மறுபடியும் அதைச் செய்யாமல் இருப்பதற்கு என்னென்ன கடுமையான நடவடிக்கைகள் உண்டோ அத்தனையும் எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கிறது என்பதை நாங்கள் அறிகிறோம். இருந்தாலும் அதை மீறி சில அரசு அதிகாரிகளுடைய உடந்தையோடு இவர்கள் சில காரியங்களை இன்றைக்கும் செய்வதுத் போலத் தெரிகிறது. எனவே அரசு அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு இலட்சக்கணக்கான ரூபாய் அரிசியைப் பறிமுதல் செய்கின்ற சூழ்நிலையில் அவர்களுக்கு இன்சென்ட்டிவ் ஏதும் வழங்கப்படுமா? அதுபோன்று அரிசி கடத்தலைத் தடுப்பதற்காக மக்கள் சக்தியை இந்த அரசு பயன்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் யார் யார் கடுமையான நடவடிக்கை எடுத்து இதை தடுக்கிறார்களோ அவர்களை

அரசாங்கம் நிச்சயமாக ஊக்குவிக்கும் என்பதையும் அதே போல இந்தக் கள்ளக் கடத்தல் செய்பவர்களுக்கு யார் உடந்தையாக இருக்கிறார்களோ அவர்களுக்கும் கள்ளக் கடத்தல் செய்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படுகிறதோ அதே மாதிரி கடுமையான தண்டனை வழங்குவோம் என்பதையும் புரட்சித் தலைவி அவர்களின் உத்திரவின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய பிரதிநிதிகளாக வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே அரசுக்கு முழு ஒத்துழைப்பு தந்தால் கடத்தலை முழுமையாக ஒழித்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 672 திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

672—

குடியிருப்போர் சங்கங்கள் மூலமாக உணவுப்பொருள்கள் வினியோகித்தல்

3470—திரு. டி. எம். ரங்கராஜன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னையில் பல குடும்பங்களில் கணவன்—மனைவி இருவருமே பணிக்குச் செல்வதால் அவர்கள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து உணவுப்பொருள்களை வாங்க நகரில் உள்ள குடியிருப்போர் சங்கங்கள் (Residence Association) மூலமாக பொருள்களை வினியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்படிப்பட்ட கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை மாநகரத்தை எடுத்துக் கொண்டால் பல குடும்பங்களிலே கணவனும், மனைவியும் வேலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் வேலையிலிருந்துதிரும்பி வருகின்ற காலக் கட்டத்திற்குள்ளாகவே இந்தப் பொருட்களை வினியோகிக்கின்ற ரேஷன் கடைகள் மூடப்படுகின்றன. இவற்றைத்